**தவலம பிரதேச சபை**

**காலி மாவட்டம்**

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 27 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 28 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 22 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

---------------------------------------------

இவ்வறிக்கையின் பந்தி 1.3 இல் குறிப்பிட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கல்கள் தவிர, நிதிக் கூற்றுக்களின் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான தவலம பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களின் பிரகாரம் உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகிறது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

--------------------------------------------------------------

1.3.1 இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணக்கமின்மை

----------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 ஜனவரி 19 திகதிய இலக்கம் PED/54 கொண்ட அரச தொழில் முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்று நிருபத்தின் பிரகாரம் 2011 ஜனவரி 01 திகதி முதல் உள்ளூராட்சி நிறுவனங்கள் அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுகளை தயாரிக்க வேண்டும். எனினும் அந் நியமங்களை கடைபிடித்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களுடன் காசுப்பாய்ச்சல் கூற்று சமர்ப்பித்திருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

------------------------------------------

சபையினால் கடைபிடிக்கப்பட்டிருந்த கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.3.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டிற்கான நிலையான வைப்புக்களின் வட்டி ரூபா 25,830 தொகை மீளாய்வாண்டிற்கான வருமானம் என நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) அலுவலர்களுக்கு வழங்கியிருந்த ரூபா 14,255 பெறுமதியான 16 கணக்கு இயந்திரங்கள் அலவலக உபகரணங்களின் கீழ் மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஓய்வு பெற்றுள்ள உள்ளூராட்சி ஊழியர்கள் தொடர்பாக ஓய்வூதியத் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டியிருந்த ஓய்வூதியப் பங்களிப்புத் தொகை ரூபா 1,970,647 தொகைக்காக நிதிக் கூற்றுக்களில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

1.3.4 தொங்கல் கணக்குகள்

---

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 18,428 இற்கான தொங்கல் கணக்குகளிலுள்ள வரவு மீதியை இனங்கண்டு சீராக்கல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 23,156,587 இற்கான காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக நாளது வரை பேணப்படும் நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் கணிப்பீட்டு சபை அறிக்கைகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

2. நிதி மீளாய்வு

---

2.1 நிதி விளைவுகள்

---

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது பிரதேச சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 379,708 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவுகள் ரூபா 2,464,624 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

---

2.2.1 ஏக்கர் வரி

---

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக சபையினால் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 72,555 இற்கான ஏக்கர் வரி 1987 இன் 15 இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 158 இன் பிரகாரம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.2 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

---------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அலுவலர்களிடம் இருந்து 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 468,420 இற்கான நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 1,580,940 இற்கான முத்திரைக் கட்டணம் என்பன கிடைக்க வேண்டியிருந்தன.

2.2.3 கடை வாடகை

------------------------

பட்டஹேன இரண்டு மாடி சந்தை தொடர்கட்டிடத்தில் 13 கடைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) தென் மாகாண உள்ளுராட்சி ஆணையாளரின் 2010 திசெம்பர் 27 ஆந் திகதிய இலக்கம் தபபா/பபாகொ/2010/01 கொண்ட சுற்று நிருபத்தின் 5 ஆம் பந்தியின் பிரகாரம் அனைத்து உடன்படிக்கைகளும் மூன்று வருடங்களுக்கு ஒரு முறை ஏனும் நாளது வரை ஆக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதும் கணக்காய்வுத் திகதியாகிய 2014 மார்ச் 10 திகதி வரை சபைக்கு சொந்தமான 12 கடைகளின் வாடகை உடன்படிக்கைகள் இன்றி நடத்தப்பட்டு வந்துள்ளன.

(ii) மேற்கூறிய சுற்று நிருபத்தின் 6ஆம் பந்தியின் பிரகாரம் குறைந்த பட்சம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறையேனும் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதும் அனைத்து கடைகளிலும் இருந்து 09 வருடங்களை விட பழமையான பெறுமதி மதிப்பீட்டு தொகையின் பிரகாரம் தீர்மானிக்கப்பட்டிருந்த வாடகைத் தொகை அறவிடப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

(iii) வாடகை ஒப்பந்தத்தில் 19 வது நிபந்தனையின் பிரகாரம் குறிப்பிட்ட திகதியில் வாடகை செலுத்தப்பட வேண்டும். தொடர்ந்து மூன்று மாதங்கள் செலுத்தத் தவறின் ஆதனத்தினை வைத்திருக்கும் உரிமை பிரதேச சபை சட்டத்தின் பிரகாரம் செயற்பட்டு திருப்பி பெறுவதற்காக ஒட்டு மொத்த உரிமை சபைக்கு உண்டு என அறிவித்திருந்த போதும் 06 மாதங்களுக்கு மிகையான வாடகை செலுத்தப்படாத 04 கடைகள் தொடர்பாக அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.

(iv) வாடகைப் பெற்றவர் அக் கடையை அல்லது அதனது ஒரு பகுதியின் அனுபவிக்கும் உரிமையை வேறு ஒரு நபருக்கு இடை வாடகை செய்யக் கூடாது என உடன்படிக்கையில் குறிப்பிட்டிருந்த போதும், முதல் மாடியிலுள்ள 03 கடைகள் இடை வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தன.

(v) சபையின் எழுத்துமூல அங்கீகாரம் இன்றி இந்த கடைகளின் ஏதேனும் மாற்றங்கள் அல்லது புதிதாக பகுதி ஒன்று சேர்த்தல் புதிதாக நிர்மாணித்தல் மாற்றங்கள் மேற்கொள்ள முடியாது என உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த போதும் 02 கடைகளில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(vi) ஏதேனும் நிபந்தனை ஒன்றினை மீறும் இடத்து அது தொடர்பாக அறிவித்ததன் பின்னர் ஒரு மாத அறிவித்தல் கொடுத்து கடைகளை சபைக்கு உரித்தாக்குதற்காக முழுமையான அதிகாரம் உள்ளது என உடன்படிக்கையில் காட்டப்பட்டிருந்த போதும் நிபந்தனைகளை மீறிய வாடகையாளர்கள் தொடர்பாக அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.

(vii) வர்த்தக தொடர்கட்டிடத்தில் 08 கடைகளில் இருந்து கணக்காய்வுத் திகதியாகிய 2014 மார்ச் 11 திகதி வரை ஒரே தடவையில் செலுத்தும் தொகை ரூபா 540,000 சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

---------------------------------------------------

1988 இன் 74 இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1975 இன் 01 இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் சட்டத்தின் தேவையின் பிரகாரம் தலைவர், உப தலைவர் உட்பட 07 அங்கத்தவர்களினால் 2011, 2012 மற்றும் 2013 ஆண்டுகளுக்காக கணக்காய்வுத் திகதியாகிய 2014 மார்ச் 17 திகதி வரை சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் கூற்று சமர்ப்பித்திருக்கவில்லை.

3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

-----------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2005 அக்டோபர் 05 திகதிய இலக்கம் 1413/15 கொண்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானியின் மூலம், பிரதேச சபை ஒன்றின் தலைவர், உப தலைவர் மற்றும் சபை அங்கத்தவர்கள் மந்திரிமார் படி செலுத்தும் போது மருத்துவ காரணங்களுக்காக மற்றும் சபையின் அங்கீகாரத்துடன் விடுமுறைகள் பெற்றுள்ள சந்தர்ப்பங்கள் குறிப்பிட்ட மாதத்தில் நடைபெற்றுள்ள சபைக் கூட்டங்கள் மற்றும் குழுக் கூட்டங்களுக்கு பங்குபற்றாமை படிகள் செலுத்த முடியாது என குறிப்பிடப்பட்டிருந்த போதும் அவ் ஏற்பாடுகளுக்கு முரணாக 2013 ஆண்டின் போது 05 மந்திரிமார்களுக்கு ரூபா 46,500 கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) பதவியணிக் கடன்

-----------------------------

மாற்றம் பெற்றுச் சென்றுள்ள, ஓய்வு பெற்றுள்ளமை மற்றும் கடமையை விட்டுச் சென்றுள்ள 11 ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 187,509 இற்கான கடன் மீதியினை அறவீடு செய்வதற்குரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.3 செயற்படாத சொத்துக்கள்

------------------------------------------

சபைக்குச் சொந்தமான ரூபா 1,944,050 பெறுமதியுடைய இரண்டு வாகனங்கள் மற்றும் ரூபா 185,000 பெறுமதியான கொங்கிரீட் கலவை இயந்திரம் 02 வருடங்கள் முதல் 04 வரை செயற்படுத்தப்படாத நிலையில் காணப்பட்டது என 2014 மார்ச் 11 திகதி மேற்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்